1969 மார்ச் 15]

ஆபாச புத்தகங்கள்.

* 305 வின.—திரு வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு முதல் அமைச்சா தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுககு விடையளிப்பாரா—

(அ) மைசூர் ராஜ்ய எல்லேயில் அச்சிடப்பட்டு 1954-ம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ள 'நியூ ஜாலி கிளப், என்ற ஆபாச புத்தகம் இம் மாநிலத்தில் விற்பனே செய்யப்படுகறதா?

(இ) ஆம் எனில், அதைத் தடுக்க எடுத்த அல்லது எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி (அ) இல்லே.

(இ) வின எழாது.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், இந்த ஆபாசப் புத்தகங்கள் விற்பனேக்கு வந்து கடைகளில சாதாரணமாக இருக்கும் பத்திரிகைகளோடு கார்ட்டூன் புத்தகங்களும இருக்கின்றன. ஆகவே, தயவு செய்து இந்தமாதிரியான புத்தகங்களேத் தடுக்க விசேஷ நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி: உறுப்பினர் கேட்டிருப்பது, 'நியூ ஜாலி கிளப், புத்தகம் பற்றிக் கேட்டார்கள், பதில் கொடுத்தேன். விற்பனேக்கு வந்து, அவாகள் வாங்கிய புத்தகங்களேப் பற்றி எனக்குத் தெரியாது.

'Ombudsman'.

* 306. Q.—Thiru A. M. RAJA: Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to introduce the system of 'Ombudsman' in our State?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி: இல்லே.

திரு. ஏ. எம். இராஜா: தலேவர் அவர்களே, மத்திய சர்க்காரிடமிருந்து, இது சம்பந்தமாக ஏதேனும் குறிப்பு மாநில அரசுக்கு வந்துள்ளதா? அதன் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? எழுதிய பதில என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி: மக்கள் நலக்காப்பாளர் என்ற குறிப்பு வரவில்லே.

திரு. ஏ. சி. நரசிம்மன்: தலேவர் அவர்களே, பெரிய பெரிய அதிகாரிகள், லஞ்ச ஊழல் போன்ற குற்றங்கள செய்ததாக புகார் வந்தால், அவற்றை விசாரிக்க ஒரு 'ஆம்புட்ஸ்மேன்' இருந்தால்தான், நலமாக இருக்கும் என்பதை சர்க்கார் அறிவார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி: இப்பொழுதே அவற்றையெல்லாம் கண்டுபிடிக்க ஏற்பாடுகள் இருந்து வருகின்றன.

திரு. கே. விநயகம்: சார், ஆம்புட்ஸ்மன் ஸிஸ்டம் இங்லாந்தில் தான் முதன் முதலாக அமுலுக்கு வந்து நல்ல பயன் தந்திருக்கிறது. நாங்கள் அது பற்றிப் படித்திருக்கிறோம். அது நல்ல ஸிஸ்டம் (திரு. ஹண்டே: ஸ்வீடனில்) ஆமாம், ஸ்வீடனில் இருந்து வந்தது. அது நல்ல ஒரு ஸிஸ்டமாக இருந்தால், அதைப் பரிசீலித்து, நம் நாட்டிற்கு